(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No. 166/2021**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.1 (LW. 1)

| | | |
|---|---|---|
| Name | : | செந்தாமரை கண்ணன் |
| Father's/Husband Name | : | மணிக்கண்ணன் |
| Village | : | கோபொன்னேரி |
| Taluk | : | விருதாச்சலம் |
| Occupation | : | ரிக்மேனேஜர் |
| Age | : | 32 |

(1, 4 எதிரிகள் ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜரில்லை. 2,3 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of 20.09.2024

**முதல் விசாரணை:-**

ஆஜர் எதிரிகள் பானுமதி மற்றும் அன்பரசு எனக்கு தெரியும். ஆஜரில்லாத எதிரிகள் பூபதி மற்றும் குமார் எனக்கு தெரியும். நான் ரிக் வண்டி சொந்தமாக வாங்குவதற்காக திருச்செங்கோட்டை சேர்ந்த யுவராஜ் என்பவரை அனுகினேன். அவர் பரமசிவகவுண்டம் பாளையத்தை சேர்ந்த அன்பரசை எனக்கு அறிமுகப்படுத்தினார். நான் அன்பரசுக்கு சொந்தமாக ரிக் வண்டி KA 01 MK 5251 மற்றும் சப்போட் TN 28 KJ 3494 என்ற வண்டியை 47 லட்சத்திற்கு விலை பேசி முடித்து அவருக்கு பல்வேறு தேதிகளில் நான் அவருக்கு சுமார் ரூ.7,80,000/- பணம் கொடுத்தேன். பின்னர் 16.12.2019 அன்று அந்த ரிக் வண்டியை பழுது பார்ப்பதற்காக திருச்செங்கோட்டிலுள்ள பட்டறைமேட்டில் ஸ்ரீ

ராஜலட்சுமி பட்டறையில் ரூ.5,20,000/– பழுது பார்ப்பதற்காக கொடுத்து விட்டு ஊருக்கு சென்றுவிட்டேன். பின்னர் பொங்கல் பண்டியை முடித்துவிட்டு ராஜலட்சுமி பட்டறையில் ரிக் வண்டியை பற்றி கேட்டபோது கடை உரிமையாளர் அன்பரசும், குமாரும் வண்டியை எடுத்து சென்றதாக கூறினார்கள். பின்னர் அன்பரசுவிடம் இதை பற்றி விசாரித்தபோது அவர் என்னிடம் சரியாக விளக்கம் அளிக்கவில்லை. அவரிடம் ரிக் வண்டி மற்றும் பணம் பற்றி கேட்டபோது அன்பரசு பைனாஸ்சர் பழனிசாமியிடம் கேட்டு சொல்வதாக கூறினார். இதே போன்று நான் ஒவ்வொரு தடவையும் கேட்டபோது காலம் தாழ்த்தி வந்தார். சரியாக விளக்கம் அளிக்கவில்லை. இதை பின்னிட்டு 16.03.2020ம் தேதி மதியம் 3.00மணியளவில் இதை பற்றி அவரிடம் நேரடியாக கேட்க அவர் வீட்டிற்கு சென்றபோது அன்பரசும், பானுமதியும் அங்கு இருந்தார்கள். நான் அவர்களிடம் வெளியில் இருந்து பணத்திற்கும், ரிக் வண்டிக்கும் ஏதாவது பதில் சொல்லுங்கள் என்று கேட்டேன். அதற்கு அன்பரசும், பானுமதியும் என்னை பார்த்து கெட்ட வார்த்தையால் திட்டி, உனக்கு பணமும் கிடையாது, வண்டியும் கிடையாது என்று கூறினார்கள். அந்த சத்தம் கேட்டு அருகில் இருந்த குமார் மற்றும் பூபதி ராஜாவும் என்னை பார்த்து தேவடியா பயா, கண்டார ஓலி பயா வண்டியும் கிடையாது, பணமும் கிடையாது என்று கூறினார்கள். பின்னர் அன்பரசு கீழே கிடந்த கட்டையால் வேகமாக என் பின் தலையில் அடித்தார். பின்னர் பானுமதி தடியால் முகத்திலும், தொடையிலும், கையிலும் மாறி மாறி அடித்தார். பின்னர் குமார் என்பவர் எனது கன்னத்தில் அடித்து காலால் நெஞ்சிலும், வயிற்றிலும் மாறி மாறி உதைத்தார். பின்னர் அன்பரசிடம் அந்த கட்டையை பிடுங்கி எனது தலையிலும், உடம்பிலும் அடித்தார். பின்னர் பூபதி ராஜா அந்த கட்டையால் எனது நெற்றியிலும், வலதுபக்க கண்ணிலும் மாறி மாறி அடித்தார். பின்னர் நான் சத்தம் போடவே அருகில் இருந்தவர்கள் வந்தவுடன் கட்டையையும், தடியையும் காட்டி உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறிவிட்டு கட்டையும், தடியையும் அதே இடத்தில் போட்டுவிட்டு சென்றுவிட்டார்கள். நான் தகவல் சொல்லி சரவணன் மற்றும் யுவராஜ்சும்

என்னை திருச்செங்கோடு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்தார்கள். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலிசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் கட்டை மற்றும் தடியால் தான் அன்பரசு, குமார், பூபதி ராஜா, பானுமதி அடித்தார்கள். அந்த கட்டை **அ.சா.பொ.1** மற்றும் தடி **அ.சா.பொ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:-இல்லை

A SURESH BABU
Digitally signed by A SURESH BABU
Date: 2024.09.20 17:26:59 +0530